**R 4976 (page 64)** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# கொடிய காலங்கள் வருமென்று

# PERILOUS TIMES SHALL COME

“மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக.”
- 2 தீமோத்தேயு 3:1

“அந்தகார சங்கிலிகளினால்” விழுந்துபோன தூதர்கள் கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்பட்டிருப்பதற்கும், பிசாசுகளின் பிரபுவாகிய சாத்தான் கட்டப்படுவதற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தினை நாம் தெளிவாய் வேறுபடுத்திக்கூற அறிந்திட வேண்டும். சாத்தானின் கட்டப்படுதல் என்பது வேதவாக்கியங்கள் முன்வைப்பதுபோன்று, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் சம்பவிக்கின்ற காரியமாகும்; “பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங்கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான்” (வெளிப்படுத்தல் 20:2). அந்த ஆயிரம் வருடகாலங்களில் கிறிஸ்து மற்றும் அவரது பரிசுத்தவான்கள், தேவனுடைய இராஜாக்களெனவும், ஆசாரியர்களெனவும் ஆளுகைசெய்வார்கள். விழுந்துபோன தூதர்களின் கட்டுப்பாடு-குறித்துப் பரிசுத்த பேதுருவும், பரிசுத்த யூதாவும் குறிப்பிடுகின்றனர். இந்த விழுந்துபோன தூதர்களைக்குறித்துப் பேசுகையில் பரிசுத்த பேதுரு அடிகளார் பின்வருமாறு கூறியுள்ளார்:

“அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்.” (1 பேதுரு 3:20; யூதா 6; 2 பேதுரு 2:4)

வேதவாக்கியங்களை ஆராயும்போது, வெளிச்சத்தின் தூதர்கள் சிலர் கீழ்ப்படியாமல் போனவர்களாகி, தங்கள் ஆதிமேன்மையைத் துறந்து, மனிதர் ஆகும்படிக்கு விரும்பி, மனித உருவம் எடுத்துக்கொண்டார்கள் என்று பார்க்கின்றோம். இவர்களைப்பற்றின பதிவை ஆதியாகமம் 6:1-4-வரையிலான வசனங்களில் காண்கின்றோம்: “மனுஷர் பூமியின்மேல் பெருகத்துவங்கி, அவர்களுக்குக் குமாரத்திகள் பிறந்தபோது, தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள். அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப்போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார். அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள்; பின்பு தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றபோது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்.” 1600-வருடங்களாக பூமி முழுவதும் பொல்லாங்கினால் நிரம்பிக் காணப்பட்டது. பேழையில் காக்கப்பட்டவர்களைத் தவிர்த்து, மீதமுள்ள மனுக்குலம் யாவரையும் தேவன் அழித்துப்போட்டார்.

### தேவனுடைய வார்த்தைகளை அவமாக்கிப்போட ஆவிகள் நாடுகின்றன

விழுந்துபோன ஆவிகளுக்கு என்னவாயிற்று என்று அப்போஸ்தலன் தொடர்ந்து

தெரிவிக்கின்றார். இவர்கள் முன்பைவிட வல்லமையிலும், அதிகாரங்களிலும் குறைவுபட்டிருக்கின்றனர். முன்பு இவர்களுக்கு மனித உருவம் எடுக்கும் வல்லமை இருந்தது; இவர்கள் புசித்து, பானம்பண்ண முடிகிறவர்களாய் மாத்திரம் காணப்படாமல், இன்னுமாக மனுஷர் செய்யக்கூடிய காரியங்கள் அனைத்தையும் செய்ய முடிகிறவர்களாகவும் காணப்பட்டார்கள். ஜலப்பிரளயத்திற்குப் பிற்பாடு இவர்கள் அந்தகார சங்கிலிகளினால் கட்டிப்போடப்பட்டனர்; அதாவது மனித உருவம் எடுப்பதற்கும், முன்பு இவர்கள் செய்து வந்ததுபோன்று ஒளியிலுள்ள தங்கள் வல்லமையைப் பயன்படுத்துவதற்கும் தடைபண்ணப்பட்டனர். எனினும் இவர்கள் தொடர்ந்து கிரியை புரிந்துகொண்டிருக்கின்றனர்; அதாவது யுத்தத்தின் முடிவு என்னவாக இருக்கும் என்று விசாரிக்கும்படிக்குச் சவுல் எந்தோரின் அஞ்சனக்காரியிடம் உதவிக்காக நாடினபோது, இவள் வாயிலாகச் செயல்பட்டதுபோன்று, இன்னமும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனர். (1 சாமுயேல் 28:7-20)

மரித்தவர்களோடு தொடர்புகொண்டிருப்பதுபோன்று நடித்துக்கொண்டிருப்பவர்களிடமிருந்தும், முணுமுணுவென்று ஓதுகிற குறிகாரர்களிடமிருந்தும் நாம் விலகிக்கொள்ள வேண்டும் என்று ஏசாயா தீர்க்கத்தரிசி கூறியுள்ளார் (ஏசாயா 8:19). இந்த விழுந்துபோன ஆவிகள் தேவனுடைய வார்த்தைகளை அவமாக்கிப்போட நாடுகின்றன; ஆகையாலே மரித்தவர்கள் பலரைப்போன்று, இந்த ஆவிகள் ஆள்மாறாட்டம் செய்து காட்சிக்கொடுக்கின்றன; சவுலின் விஷயத்திலும் சாமுயேல்போன்று ஆள்மாறாட்டம் பண்ணித் தோன்றின. சவுலுக்குத் தேவன் தெரிவிக்க மறுத்த விவரங்களை, சாமுயேல் வந்து சவுலுக்குக் கொடுத்தார் என்று அனுமானிக்கக்கூடாது. இதே கொள்கையானது நம்முடைய நாட்களுக்கும் பொருந்தும். மனித சித்தங்களைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதன் வாயிலாக, மனித சரீரங்களைக் கட்டுப்பாட்டிற்குள் பெற்றுக்கொள்ளும்போதே அல்லாமல், மற்றபடி விழுந்துபோன ஆவிகளினால் தங்கள் கிரியைகளை நடப்பிக்க முடியாது.

-----------------------------